செ.வெ.எண்:26/2017 நாள்:14.03.2017

**<u>சிவகங்கை வட்டம், ஒக்கூர் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.</u>**



சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு குறு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது. ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர்.

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சிறப்பு செயலாக்கத் திட்டத்தின் கீழ் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன. மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத் திட்டங்களை எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொது மக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் பாராட்டினர்.

இப்புகைப்படக் கண்காட்சியினை அமைக்கும் பணியை செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலுவலர்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.